July 2020

ஜூலை 2020

# Chezhumai

# செழுமை



## Battling an enemy you cannot see is hard

COVID-19 is not known to cause disease in cattle, but following the best practices to keep the cattle healthy is important:

1. Restrict the movement of visitors to the livestock farms & practice biosecurity measures.
2. Strength of farm workers/ animal shed attendants should be minimized with maximum output per worker without jeopardizing their health
3. Workers coming to livestock farms should wear mask, use sanitizer and should follow the best practices
4. If any worker is found ill, he should be channelized to take standard health measures to avoid any possibility for disease spread.
5. The animal farm equipment and accessories should be cleaned and sanitized regularly
6. High touch points should be cleaned twice daily
7. Observe animals for any abnormal behaviour
8. Isolate the sick animals & in case of emergency contact the nearest Veterinary hospital

## பார்க்க முடியாத "எதிரியை" எதிர்த்துப் போராடுவது கடினம்

கோவிட் -19 கால்நடைகளில் நோயை ஏற்படுத்தும் என்று தெரியவில்லை, ஆனால் கால்நடைகளை ஆரோக்கியமாக வைத்திருக்க சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுவது முக்கியம் :

1. கால்நடை பண்ணைகளுக்கு பார்வையாளர்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துங்கள் மற்றும் உயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை கடைப்பிடிக்கவும்.
2. பண்ணை தொழிலாளர்கள் / விலங்கு உதவியாளர்களின் எண்ணிக்கையை குறைத்து தொழிலாளியின் உடல்நலத்தை பாதிக்காமல் அதிகபட்ச உற்பத்தியை குறைக்கவும்
3. கால்நடை பண்ணைகளுக்கு வரும் தொழிலாளர்கள் முக கவசம் அணிய வேண்டும், சானிட்டீசரைப் பயன்படுத்த வேண்டும், சிறந்த நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்
4. எந்தவொரு தொழிலாளியும் நோய்வாய்ப்பட்டதாகக் கண்டறியப்பட்டால், நிலையான சுகாதார நடவடிக்கைகளை எடுக்க அவர் வழிநடத்தப்பட வேண்டும் நோய் பரவுவதற்கான எந்த வாய்ப்பையும் தவிர்க்கவும்.
5. விலங்கு பண்ணை உபகரணங்கள் மற்றும் பாகங்கள் தவறாமல் சுத்தம் செய்யப்பட வேண்டும்
6. அதிகமாக மற்றும் அடிக்கடி தொடக்கூடிய இடங்களை ஒரு நாளில் இரண்டு முறை சுத்தம் செய்யவும்
7. விலங்குகளில் ஏதேனும் அசாதாரணமான நடவடிக்கை இருக்கிறதா என்று கவனிக்கவும்
8. நோய்வாய்ப்பட்ட விலங்குகளை தனிமைப்படுத்தவும், அவசர காலங்களில் அருகிலுள்ள கால்நடை மருத்துவமனையை தொடர்பு கொள்ளவும்

**TIST Tree Planting India Pvt. Ltd**
Flat A, Plot 69, 26th Street, Sankar Nagar, Pammal, Chennai 600075.
Mobile : 9840299822
Email: josephrexontist@gmail.com
Skype: a.joseph.rexon
Web: www.tist.org

The International Small Group & Tree Planting Program

TIST - Planting Trees and Improving Agriculture for Better Lives

டிஸ்ட், மரங்களை நடவு செய்தல் மற்றும் சிறந்த வாழ்க்கைக்கு விவசாயத்தை மேம்படுத்துதல்

## சேத்துப்பட்டு இயற்க்கை விவசாயம் - நிலத்தில் நுண்ணுயிர்பெருக்கமும் மகசூல் அதிகரித்தல்

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி வட்டம் மருதாடு கிராமத்தில் நடைபெற்றது. பயிற்சியாளர் - திரு தியாகராஜன் அவர்கள்

RPS -76 எனும் இயற்க்கை வளர்ச்சி ஊக்கியை அனைத்துபயிர்களுக்கும் பயன்படுத்தலாம். பயன்படுத்துவதின்மூலம் மண்வளம் மேம்படுத்துவதை பற்றியும் நுண்ணுயிர் பெருக்கம் அதிகரித்தலையும் விளக்கமாக கூறினார். மேலும் தெளிப்புமுறையிலும் தண்ணீர் பாய்ச்சும் வாய்க்கால் வழியாகவும் 15 நாட்களுக்கு ஒருமுறை பயன்படுத்துவதின்மூலம் நோய்தாக்குதல் மற்றும் புச்சி தாக்குதல் இருக்காது. இக்கரைசாலானது ஏக்கருக்கு 1 லிட்டர் போதுமானது .இதை பயன்னடுத்துவதின்மூலம் குறைந்த நீர் போதுமானது. இதன் மூலம் கூடுதல் மகசூல் கிடைக்கும்.

**குறிப்பு**:

மரப்பயிர்களுக்கு அரையடி இடைவெளிவிட்டு மண்ணில் துளையிட்டு ஊற்றுவதன்மூலம் மரங்கள் கூடுதல் பருமன் உயரமாக வளரும்.

## அனைவரும் ஒன்றிணைந்து நம் பூமியை காப்போம், நம் எதிர்கால தலைமுறைகள் வாழ்வதற்கு நல்ல ஒரு சூழலை உருவாக்குவோம்

பூமியே நமக்கு எல்லாம் கொடுக்குது நாமும் சிறிது கொடுத்து பழகணும் என்ற வரிகளில் கூறியதுபோல் நாம் சுவாசிக்கும் காற்று முதல் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் அனைத்தும் பூமியிலிருந்து எடுத்துக் கொள்கிறோம். ஆனால் நாம் பூமிக்கு ஏதாவது கொடுக்க நினைத்தால் நாம் நிச்சயம் மரக்கன்றுகள் நடவு செய்து பூமியில் உள்ள நிலத்தடி நீரை உயர்த்திட வேண்டும், கார்பன் டை ஆக்சைட் (கரியமில வாயு) சுத்திகரித்திட வேண்டும், உலகம் வெப்பமாதலை குறைத்திட வேண்டுய்ம். டிஸ்ட் - உடன் இணைந்து பயன்பெற டிஸ்ட் சார்பாக உங்களை அழைக்கிறோம். மற்றும் நீங்கள் வசிக்கும் இடத்திலுள்ள ஆர்வமுள்ள விவசாயிகள், மரங்கள் மற்றும் அதனுடன் சேர்ந்து விவசாயமும் செய்யலாம் என்ற ஆர்வமுள்ள விவசாயிகளை டிஸ்ட் திட்டத்தில் இணைந்திட **உதவுங்கள்**. இதனால் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து அதிகமான மரங்களை நடவு செய்து இயற்கையை காப்பாற்றுவதற்கு ஒரு வாய்ப்பாகும்.



## Tiruvannamalai District

We the members of Vishnu Small group from Avaniyapuram Village of Chetpet Center are caring 612 teak trees in our land. We collected the shed leaves from our groves during April and May months and now we are using those leaves to cover the root area along with natural fertilizers. For each and every tree we are loosening the soil around the trees and mixing natural fertilisers in the soil. We are also learning the best practices from TIST employees through WhatsApp group to care the trees. We are also receiving tree stipend from TIST without fail. During this Covid season, we are engaging our family members to do works like improving the soil, mulching, etc., and caring our trees well. We request other small group members to follow our best practices in taking care of the trees.

## திருவண்ணாமலை மாவட்டம்

சேத்துப்பட்டு மையம் ஆவணியாபுரம் கிராமத்தில் உள்ள விஷ்ணு சிறு குழு ஆகிய நாங்கள் எங்கள் நிலத்தில் சுமார் 612 தேக்கு மரங்களை நன்கு பராமரித்து வருகின்றோம். எனவே இவ் வருடம் ஏப்ரல் மே மாதங்களில் நிலத்தில் விழுந்த இலைகள் அனைத்தும் இம்மாதத்தில் மரத்தின் வேர்ப்பகுதியில் அனைத்து மற்றும் இயற்கை உரமிட்டு நல்ல முறையில் பாதுகாத்து வருகின்றோம். ஒவ்வொரு மரங்களுக்கும் மரத்தின் அடிப்பகுதியில் இருந்து ஒரு அடி விட்டு இயற்கை குத்து உரம் இட்டு வருகின்றோம். எனவே மாதந்தோறும் வாட்ஸ்அப் மூலம் டிஸ்ட் இந்தியா ஊழியர்கள் வழங்கும் செய்திகள் மற்றும் பயிற்சிகள் அனைத்தும் படித்து பார்த்து நல்ல பலனை அடைகிறோம். மேலும் டிஸ்ட் இந்தியாவின் ஊக்கத் தொகையை இடைவிடாமல் பெற்று வருகின்றோம். எங்கள் தேக்கு தோப்பில் இருக்கும் வேலைகள் மண் அணைத்தல், மூடாக்கு முறை செய்தல் போன்ற வேலைகளை எங்கள் குடும்பத்தில் உள்ள நபர்களை வைத்து இந்த கொரோனா காலத்தில் எங்கள் மரங்களை நன்றாக பராமரித்து வருகின்றோம். மற்ற சிறு குழு விவசாயிகளும் எங்களைப்போல் மரங்களைப் பராமரிக்க கேட்டுக்கொள்கிறோம்.



## Tiruvallur District

We the members of Devi Small Group from Thiruthani Center of Tiruvallur District are following the best practices of TIST for the last four years, we have planted 1,340 teak trees. We are participating in the training programs of TIST, learning the best practices and monitoring the trees in good way. We are also practicing intercrops in our tree groves like groundnut, black gram and getting good yield from the intercrops. Along with the income from intercrops we are also getting TIST tree stipend of Rs.6,279 for our trees. Our sincere thanks to TIST India.

## திருவள்ளூர் மாவட்டம்

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி மையம் TNR கண்டிகை கிராமம் தேவி சிறு குழு ஆகிய நாங்கள் கடந்த நான்கு வருடங்களாக டிஸ்ட் நிறுவனத்திடம் இணைந்து 1,340 தேக்கு மரக்கன்றுகளை பெற்று நடவு செய்து டிஸ்ட் இந்தியா தரும் பயிற்சி கூட்டங்களில் கலந்து கொண்டு சிறந்த முறையில் செயல்பட கூடிய பயன்களை தெரிந்து கொண்டு நல்ல முறையில் பாதுகாத்து வளர்த்து வருகிறோம். மேலும் எங்கள் தோட்டத்தில் ஊடு பயிர்களாக வேர்க்கடலை, உளுந்து ஆகியவற்றை சாகுபடி செய்து நல்ல முறையில் மகசூலை பெற்று வருகிறோம். மேலும் இதனுடன் டிஸ்ட் இந்தியாவிடம் இருந்து வரும் ஊக்கத்தொகை ரூபாய் 6,279/- பெற்று பயன் அடைந்து உள்ளோம். மேலும் தேக்கு மரக்கன்றுகள் தேவைப்படுவதால் டிஸ்ட் இந்தியாவிடம் அணுகி உள்ளோம். டிஸ்ட் இந்திய நிறுவனத்திற்கு எங்கள் சிறு குழு சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

